**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**

**<u>தஞ்சாவூர் (இ) பட்டுக்கோட்டை.</u>**

**அ.சா. 5** **நாள்:** 24.06.2026

| SC.No. | 15/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன். | த/பெ. | சோலையப்பன். |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :-</u>**

நான் பட்டுக்கோட்டை தெற்கு காளியம்மன் தெரு குபேந்திரன் காலனியில் குடியிருந்தேன். கோயம்புத்தூரில் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஆனந்தி (அ.சா.2) தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. ஆனந்தி வீட்டில் என்ன பிரச்சினை நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சம்பவம் எதனையும் பார்க்கவில்லை. பட்டுக்கோட்டை காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

ஆனந்தி ஜி.வி.ஆர் காலனியில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அவரது கணவர் அன்பழகன் நெல் அரிசி வியாபாரம் செய்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி அன்பழகனுக்கும் 1ம் எதிரி கலைசெல்வனுக்கும் நெல் வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்தது என்றால் அது எனக்கு

தெரியாது. 03.02.2010 அன்று இரவு 09.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது மேற்படி அன்பழகன் வீட்டுபக்கம் ஒரே சத்தமாக கேட்டதால் நான் அங்கு சென்று பார்த்தேன் என்றாலும் அப்போது ஆஜர் 1ம் எதிரியும் இன்னும் 4 பேர்களும் அன்பழகன் வீட்டிற்குள் இருந்து ஓடியதை பார்த்தேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அன்பழகன் வீட்டிற்குள் சென்று அவரது மனைவி ஆனந்தியையும் மகன் அரவிந்த்ராஜையும் தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு கம்பிகளை அங்கேயே போட்டுவிட்டு ஓடினார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. எதிரிகள் கேட்டுகொண்டபடி அவர்களை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

**5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

**மறு விசாரணை :-** இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-Thiru. M.K.Mayakrishnan,B.B.A.B.L

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தஞ்சாவூர் (இ) பட்டுக்கோட்டை.